பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு தை மீ 10 உ புதன்கிழமை (23-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 57

# தமிழ்ப் பகுதிகள் எங்கும் தீவிர விமானத் தாக்கு!

## முழு அளவில நடந்து வருகிறது

யாழ்ப்பாணம், ஜனவரி 23

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய தமிழ் மாவட்டங்களில் ஸ்ரீலங்கா படையினரின் விமானத் தாக்குதல்கள் முழு அளவில் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கடந்த மூன்று தினங்களாக தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் இந்த விமானத் தாக்குதல்கள் குறித்து தமிழ்ப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் இருந்தும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

சுமார் பத்து வரையான பொம்மர்கள், ஐந்து அவ்ரோ விமானங்கள், பதினைந்து வரையான ஹெலிக்கொப்டர்கள், மற்றும் சீபிளேன், பயணிகள் விமானங்கள் ஆகியவை இந்தத் தாக்குதல்களில் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றன.

பல பகுதிகளில் பாரிய பீப்பாய்க் குண்டுகளும் எரி குண்டுகளும் வீசப்பட்டன.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில்

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக நேற்று நண்பகல் 12.30 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

பொம்மர்கள் வீசிய இரண்டு குண்டுகளில் ஒன்று வெடித்தது. மற்றொன்று வெடிக்கவில்லை.

குண்டு வெடித்ததில் ஒரு வீட்டின் மதிற்சுவர் சேதமுற்றது. வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் சிதறின.

கல்லூரிக்கு அருகிலுள்ள வைரவ கோயிலுக்கு முன்பாக மற்றைய குண்டு வெடிக்காமல் நிலத்தில் சரிந்து புதைந்த நிலையில் காணப்பட்டது. இந்தக் குண்டு சுமார் 3 அடி உயரம் கொண்டது. அதில் GR50 MK1 என எழுதப்பட்டிருந்தது.

குண்டு வீச்சு நடந்தபோது

[2 ஆம் பக்கம் பார்க்க]

## வேலணையில்

வேலணை, ஜன: 23

வேலணையில் நேற்று முற்பகல் 11-45 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வங்களாவடிச் சந்தியில், வேலணை உதவி அரச அதிபர் பணிமனை வளவினுள் ஒரு குண்டும், மின்சார சபை விடுதிக்கு அருகில் இன்னொரு குண்டும் வீசப்பட்டன.

குண்டு வீச்சினால் அருகில் உள்ள வேலணை ஆஸ்பத்திரி சேதமடைந்தது. ஆஸ்பத்திரி ஊழியர் திரு. கு. ஆனந்தலிங்கம் காலில் காயமுற்றார்.

நேற்றைய தாக்குதலில் உதவி அரச அதிபர் அலுவலகம் மூன்றாவது தடவையாக சேதமடைந்தது. வளவில் இருந்த பனை மரங்கள் முறிந்து நாசமாகின.

இது இவ்வாறிருக்க, தனியார் வீடு ஒன்றில் இயங்கி வந்த உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊழியர்கள் அருகாமையில் உள்ள குளத்தில் குதித்து குண்டுத் தாக்குதலிலிருந்து தப்பிக்கொண்டனர். (ஒ-167)

## சாவகச்சேரிப் பகுதியில்

கைதடி, ஜன. 23

சாவகச்சேரி நகரிலும், வேம்பிராயிலும் நேற்று குடியிருப்பு பகுதிகள் மீது கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

காலை 10 மணியளவில் வேம்பிராயில் ஹெலி சரமாரியாக வேட்டுக்களையும் றொக்கட் வீச்சுக்களையும் நடத்தியது. இந்தத் தாக்குதல் நடந்து கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இரண்டு பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசின. அதை அடுத்து வந்த அவ்ரோவும் ஐந்து பீப்பாய்க் குண்டுகளை வீசித் தள்ளியது.

பீப்பாய்க் குண்டுகளில் மூன்று மட்டுமே வெடித்தன. இரு குண்டுகள் வெடிக்காத நிலையில் காணப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில்

தென்மராட்சி, ஜன. 23

நேற்று மூன்றினம் மாலை ஆனையிறவு, இயக்கச்சி, புதுக்காடு ஆகிய பகுதிகளில் இரண்டு பொம்மர்கள் குண்டுகளை வீசித் தாக்கின. ஹெலியும் வேட்டுக்களைத் தீர்த்தது.

குண்டுகளில் சில தென்னந்தோட்டப் பகுதிகளிலும், வயல்வெளிகளிலும் விழுந்து வெடித்தன. (ஒ-117)

## கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், ஜன: 23

கிளிநொச்சி, கனகபுரத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் விமானக்குண்டு வீச்சு தாக்குதல் இடம்பெற்றது.

குண்டு வீச்சில் ஒரு வீடு சேதமடைந்தது மாடொன்றும் பலியானது.

மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. (ஒ)

## நெடுங்கேணியில்

யாழ்ப்பாணம், ஜன. 23

நேற்று நண்பகல் 11 30 மணிக்கு நெடுங்கேணி நகர்ப் பகுதியில் ஹெலியிலிருந்து றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஒரு கடை இந்தத் தாக்குதலில் சேதமுற்றது. (உ)

## சேமமடு காட்டில்

வவுனியா மாவட்டம் சேமமடு பகுதியில் நேற்று பெருத்த எடுப்பில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை 7 மணி முதல் சுமார் மூன்று மணி நேரம் இடைவிடாது 7 பொம்மர்கள், 3 அவ்ரோ விமானங்கள், 3 ஹெலிக்கொப்டர்கள் ஆகியன இணைந்து மாறி மாறி இத் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை. (உ)

## மன்னார் பகுதியில்

மன்னார் மாவட்டம் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

சனியன்று காலை 6 மணி முதல் சுமார் முக்கால் மணி நேரம் நான்கு பொம்மர்கள், அவ்ரோ விமானம் ஒன்று, ஒரு சீ பிளேன், மூன்று ஹெலி ஆகியன மாறி, மாறி வான் தாக்குதல்களை நடத்தின.

ஞாயிறன்று காலை 10 மணிக்கு மீண்டும் அதே பகுதியில் இரு பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின. [உ]

## முச்சந்தி முரளி



அப்ப... அங்காலையும் பத்திரிகைகள் 'சுடச்சுட' வெளிவருகுது என்டு சொல்லுங்கோ......!

## வல்வையில் நேற்றும் எரிகுண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜன, 23

வல்வையில் நேற்று மூன்றாவது நாளாக — நாள் முழுவதும் — விட்டுவிட்டு விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன; விமானங்களிலிருந்து எரிகுண்டுகளும் வீசப்பட்டன.

காலை 7 மணியளவில் ஒரு பயணிகள் விமானம் வல்வைப் பகுதியில் ஆறு எரிகுண்டுகளை வீசியது.

இதேபோல காலை 9 மணியளவிலும், நண்பகல் 12-30 மணியளவிலும், பிற்பகல் 2 மணியளவிலும் அவ்ரோ விமானங்களிலிருந்து 15 இற்கும் அதிகமான எரிகுண்டுகள் வீசப்பட்டன.

இந்தத் தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கில் வீடுகள், கட்டடங்கள் சேதமுற்றன.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி நேற்றுக் காலை 6-40 மணிக்கு அவ்ரோ விமானம்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்தோருக்கு ஒரு வார உலர் உணவு

யாழ்ப்பாணம், ஜன. 23

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற விமானத்தாக்குதலையடுத்து இடம்பெயர்ந்த 8 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு ஒருவார உலர் உணவு வழங்க செயலகம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக அங்கு இடம்பெற்று வரும் விமானத் தாக்குதலால் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து 4 ஆயிரத்து 100 குடும்பங்களும், கரவெட்டி உதவி அரசஅதிபர் பிரிவில் இருந்து ஆயிரத்து 500 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

## இரத்தக் கறையுடன் வீசப்பட்ட பத்திரிகை!

யாழ்ப்பாணம். ஜன. 23

நேற்று அரியாலைப் பகுதியில் ஹெலியிலிருந்து வீசப்பட்ட பத்திரிகைகளில் சில வற்றில் இரத்தக்கறை காணப்பட்டது.

அந்த இரத்தக் கறைகள் பத்திரிகைகளில் எப்படி வந்தன என்பது குறித்துப் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பும் மர்மமும் நிறைந்ததாக உள்ளது.

உ... குக் ... பத்திரிகையில் இரத்தம் தோய்ந்து ஊறியிருந்தது. இரத்தம் 'பச்சையாக' இருந்தது! ஈரலிப்புடன் காணப்பட்டது. காயவில்லை.

பத்திரிகைகள் வீசிய கையோடு ஹெலிக்கொப்டர் கலிபர் தாக்குதல்களையும் நடத்தியது.

இச்சம்பவம் அரியாலை மத்தி பகுதியில் நேற்று நண்பகல் ... மணியளவில் இடம் பெற்றது. [அ-3]

## குடாநாட்டில் நேற்று பரவலாக ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 23

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று பரவலாக ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

சாவகச்சேரிப் பகுதியில் வேம்பிராய், சரசாலை, மீசாலைப் பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சரசாலையில் நண்பகல் 12.30 மணியளவில் ஹெலி நடத்திய தாக்குதலில் சரசாலை வடக்கைச் சேர்ந்த யோகேஸ்வரன் மணி என்பவர் காயமுற்றார்.

மீசாலையில் பிற்பகல் 3.45 மணியளவில் தாக்குதல் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளிலும் ஹெலித் தாக்குதல் இடம்பெற்றது.

கொழும்புத்துறையில் வீடுகள் சிலவற்றின் ஓடுகள் சிதறின. (ஒ-30)

## மட்டக்களப்பில் மிதிவெடிச் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், ஜன: 23

கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு இடங்களில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவங்களில் படையினர் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஞாயிறன்று இலவங்குளம் முகாமிலிருந்து வெளியேறிய படையினர் முள்ளிக்குளம் அருகே சென்றபோது மூன்று மிதிவெடிகள் வெடித்தன.

இதே போன்று திங்களன்று முள்ளிக்குளத்திற்கும் பாலையடிவெட்டைக்கும் இடையில் ஓரிடத்திலும் மூன்று மிதிவெடிகளில் படையினர் சிக்கினர்.

இந்த இரு சம்பவங்களிலும் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. [உ]

## 4 ஆம் கட்ட நிவாரணம் அரிசியும் கிடைக்கும்

விசேட நிவாரணத்துக்குரிய நான்காம் கட்ட உலர் உணவுப் பொருள்களில் ஒன்றாக அரிசியும் வழங்கப்படும் என அறிய வந்துள்ளது.

முதலாம், இரண்டாம் கட்டங்களில் வழங்கப்பட்ட அதே அளவு அரிசி, குடும்பப் பங்கீட்டு அட்டைகளுக்குக் கொடுக்கப்படும்.

நான்காம் கட்ட நிவாரணத்தை ஆரம்பிக்கும் திகதி குறித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

இப்போது வழங்கப்படும் மூன்றாம் கட்ட நிவாரணத்துக்கு அரிசி வழங்கப்படுவதில்லை என்பது தெரிந்ததே.

## தம்பலகமத்தில் டிரக் கண்ணியில் சேதம்!

யாழ்ப்பாணம், ஜன. 23

நேற்றுக் காலை 9 மணியளவில் திருகோணமலை மாவட்டம் தம்பலகமம் பகுதியில் படையினரின் டிரக் ஒன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மற்றாகச் சேதமடைந்தது; அதில் வந்த பல படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

திருமலை நகரத்திலிருந்து தம்பலகமம் பகுதிக்கு வந்த டிரக் மீதே கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## முத்தையா மகாதேவன்

முத்தையா மகாதேவன் முன்னதிபன் முத்துத் தம்பி வித்தகனாய்ப் பத்தாண்டு உயர்பணியில் — புத் துயிர்பெற்றோங்கி வளர்ந்தோ முயிர்நீத்த செய்தி யினால் ஏங்கித் துவளு துயிர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(15581) யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.

# மரண அறிவித்தல்கள்

## திரு. முத்தையா மகாதேவன் (M. A.)

(முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர், ஓய்வு பெற்ற உப அதிபர், முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி)

21-01-91ல் நடந்த குண்டு வீச்சின்போது திரு. முத்தையா மகாதேவன் M.A அகால மரண மடைந்தார்.

அன்னார் ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற திரு. செல்லையா முத்தையா, தங்கம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓடிற்றர் செல்லப்பா நடராசா. ஞானம்மா தம்பதியரின் புத்திரி திருமதி. புஸ்பவதியின் அன்புக் கணவரும், செல்வி வசந்திதேவியின் அன்புத் தந்தையுமாவார்.

கொக்குவில், காங்கேசன்துறை வீதியிலுள்ள அன்னாரது வீடான ''ஸ்பிறிங்'' (Spring) குண்டு வீச்சினால் சேதமுற்றுள்ளமையால், மரணச் சடங்குகள், கொக்குவில் கருவலடி ஒழுங்கையிலுள்ள சிற்றன்னையின் வீடான ''மலரகம்'' இல்லத்தில் 23-01-91 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று; பின்பு கொக்குவில் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

''மலரகம்''
கருவலடி, கொக்குவில். (15581)

## செல்வி புவனேஸ்வரி நல்லப்பா

(பரிசாரகர் - யாழ். போதனா வைத்தியசாலை)

குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது 1ஆம் ஒழுங்கை, உரும்பராய் தெற்கு வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்வி. புவனேஸ்வரி நல்லப்பா (பரிசாரகர் - யாழ். போதனா வைத்தியசாலை [22-01-91 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்,

அன்னார் கி. நல்லப்பா, காலம் சென்ற பார்வதி நல்லப்பா அவர்களின் இரண்டாவது புத்திரியும், செல்வி. பரிமளம், சுப்பிரமணியம் [சுவிற்சலண்ட்] சந்திரகாந்தன் (ஆசிரியர் - வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி சுப்பிரமணியம் (சுவிற்சலன்ட்) கௌரி சந்திரகாந்தன் (உரும்பராய்) அவர்களின் மைத்துனியுமாவார்,

அன்னாரது பூதவுடல் 22-01-91 செவ்வாய்க்கிழமை உரும்பராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்,

தகவல்:
ந. சந்திரகாந்தன்
(ஆசிரியர்-
வசாவிளான் ம. ம. வித்தியாலயம்)
(15582)

## திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம் சென்ற தலைமை ஆசிரியர் P. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி இராசம்மா 22-1-91இல் சிவபதம் அடைந்தார். இவர் சுந்தரதாஸ் [முன்னாள் அதிபர் மெம்மோரியல் கல்லூரி மானிப்பாய்], பேரின்பராணி [ஆசிரியை, இணுவில் சைவ மகாஜனா] ஆகியோரின் தாயாரும் ருக்மணி [இளைப்பாறிய கல்வி அதிகாரி, யாழ் கல்விக்கந்தோர்] வெ. ஏகாம்பரநாதன் [ஆசிரியர் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்] ஆகியோரின் மாமியும், துஷ்யந்தி, பாலமோகன், தேவந்தி, யோகநாதன், ஏ. தேவநேசன் [மருத்துவ மாணவன், யாழ். பல்கலைக்கழகம்], ஏ. ஜெயமோகன், ஏ. ஜெகதீசன் [யாழ் இந்துக் கல்லூரி], ஏ. செந்தில்நாதன் [மானிப்பாய் இந்துக் கல்லூரி], ஏ. ஸ்ரீரங்கன் [மகாஜனாக் கல்லூரி - தெல்லிப்பளை] ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 23-1-91 இன்று புதன்கிழமை, மருதனாமடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் பிற்பகல் 2 மணிக்குத் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
வெ. ஏகாம்பரநாதன்
குடும்பத்தினர்

மருதனாமடம்,
சுன்னாகம். (15240)

# ரியாத்தில் தாக்குதல்

ஈராக் மீது பன்னாட்டுப் போர் விமானங்கள் நேற்று பத்தொன்பது வான் தாக்குதல்களை நடத்தியதாக பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது. நான்கு தாக்குதல்கள் பக்தாத் நகர் மீது நடத்தப்பட்டன என்றும் குடியிருப்புக்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் நேற்று—

சவூதி அரேபியா மீது ஈராக் ஏவிய மூன்று 'ஸ்கட்' ஏவுகணைகளில் இரண்டு பாலை வனப் பகுதியில் விழுந்து வெடித்ததாகவும்—

மூன்றாவது ஏவுகணை பன்னாட்டுப் படைகளின் 'பேட்ரியட்' ஏவுகணையால் இடைமறித்து சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

சவூதி அரேபியா தலைநகர் ரியாத்தில், நகரின் மத்தியில் கடந்த திங்களன்று விழுந்து வெடித்த 'ஸ்கட்' ஏவுகணையால் பல கட்டடங்கள் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

# பஸ்ரா அதிர்ந்தது

ஆறாவது நாளாக நேற்றும் ஈராக் மற்றும் குவைத் மீது பன்னாட்டுப் போர் விமானங்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டன.

ஈராக் நகரான பஸ்ரா மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பஸ்ராவில் ஏற்பட்ட பலத்த குண்டு வெடிப்புகள் 40 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஈரானின் எல்லைப்புற நகரில் பல கட்டடங்களை அதிரச் செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

# பயணி கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

வடக்கு நோக்கி சைக்கிளில் வந்த ஒருவர் நேற்று முன்தினம் வவுனியாவில் மிதி வெடியில் சிக்கி காலை இழந்தார்.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க இவர் உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார், இவரது பெயர் விவரங்கள் தெரியவரவில்லை.

இதேசமயம் —

நேற்று முன் தினம் வவுனியா இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## 'திரு' கட்சி அ.தி.மு.க-2

சென்னை, ஜன. 23

முன்னாள் மாநில அமைச்சர் திருநாவுக்கரசு ஆரம்பித்த போட்டி அ.தி.மு.க. கட்சி இனி மேல் அ. தி. மு. க. -2 என்று அழைக்கப்படும்.

தமிழக சட்டசபை சபாநாயகர் தமிழ்க்குடிமகன் நேற்று இதனை அறிவித்தார். [ஓ-எ]

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம். ஜன 23

வடபிராந்திய லொறி உரிமையாளர்கள் சங்கத்தின் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஓ-5)

## மரணம்

வீட்டுவளவில் விளையாடிக் கொண்டிருந்த 3 வயது ஆண் குழந்தை கிணற்றில் தவறி விழுந்து மரணமானதாகக் கூறப்பட்டது;

நாவாந்துறையில் நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் அன்பழகன் செபஸ்ரியன் என்னும் குழந்தையே பலியானது (ஓ-15)

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 23

நேற்று நண்பகல் 11 மணியளவில் காரை நகர் இராணுவ முகாமிலிருந்து கருங்காலிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [உ]

## ஹெலி தாக்கி லொறி சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 23

பருத்தித்துறையில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றி வந்த நல்லூர் ப. நோ. கூ. சங்க லொறியை ஹெலி ஒன்று நேற்று மாலை துரத்தித் துரத்தித் தாக்கியது.

அச்சுவேலியில், ஆவரங்கால்- வல்லை வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் லொறியின் முன் கண்ணாடி நொறுங்கிச் சேதமடைந்தது.

லொறியில் வந்தவர்கள் வெளியில் பாய்ந்து தப்பிக் கொண்டனர் [ஓ-15]

### சாவகச்சேரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெய்வாதீனமாக எவருக்கும் உயிர். உடற் சேதங்கள் ஏதுபடவில்லை. எனினும் உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன: பெருமளவில் மரங்கள் முறிந்து காணப்பட்டன மின்சார கேபிள்களும் அறுந்து சேதமுற்றன.

பிற்பகல் 2-30 மணியளவில் சாவகச்சேரி நகரில் — தபாற் கந்தோருக்குச் சமீபமாக — பொம்மர்கள் நான்கு குண்டுகளை குடியிருப்புப் பகுதிகள் மீது வீசின.

இச்சம்பவத்தில் செபஸ்ரீனம்மா [வயது 50] என்ற பெண்ணின் வலது கை முழுஅளவில் துண்டிக்கப்பட்டது. இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். காயமுற்ற மேலும் சிலர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்,

நகரில் இடம்பெற்ற குண்டு வீச்சில் 6 வீடுகள், இரண்டு மினி பஸ்கள், தனியார் கல்வி நிறுவனம் என்பன சேதமுற்றன: [ஓ-74-15]

### மானிப்பாயில்...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் கல்லூரியிலுள்ள முருகன் கோவிலில் மணவாளக் கோல விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த திருவிழாவில் நூற்றுக்கணக்கான மாணவிகள் கலந்து கொண்டனர்.

குண்டு வெடிக்காததால் அந்த மாணவிகள் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டனர். [ஓ-100-15]

### தமிழ்...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் மானிப்பாய், வேலணை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும்—

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், ஆனையிறவு, இயக்கச்சி, புதுக்காட்டுச் சந்தி ஆகிய இடங்களிலும்—

முல்லைத்தீவு நெடுங்கேணியிலும்—

மன்னார் பெரிய பண்டி விரிச்சானிலும்-

வவுனியா சேமமடு காட்டுப் பகுதியிலும் விமான தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. [உ]

### வல்லை..:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று வீசிய மூன்று எரிகுண்டுகளினால் பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்ததாகத் தெரியவந்தது. [உ-5-15]

# எண்ணெய் வயல்கள் குவைத்தில் எரிப்பு?

குவைத் நாட்டில் உள்ள எண்ணெய் வயல்கள் மற்றும் எண்ணெய் சேகரிப்பு நிலையங்களை ஈராக்கியப் படைகள் குண்டு வைத்துத் தகர்த்து வருவதாக அமெரிக்க தரப்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதன் காரணமாக பல எண்ணெய் வயல்கள் எரிந்து கொண்டிருப்பதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

எண்ணெய் வயல்கள் தீப்பற்றி எரிவதால் எழும் புகை மண்டலம் பன்னாட்டுப் போர் விமானங்கள் தமது இலக்குகளைத் தேடிக் கண்டு பிடித்து தாக்குதல் நடத்த முடியாத நிலையை ஏற்படுத்தும் என்று ஈராக் படைகள் கருதுவதாகவும் அமெரிக்க செய்தி தெரிவித்தது.

# அமெ. விமானி மீட்பு

ஈராக் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட பன்னாட்டு போர் விமானம் ஒன்றைச் சேர்ந்த அமெரிக்க வீரர் ஒருவர் குவைத் அருகே பாலைவனத்தில் இருந்து அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்றினால் மீட்கப்பட்டார்.

பாலைவனத்தில் தன்னந்தனியனாக விடப்பட்டிருந்த அந்த வீரர், உதவி கோரி வயர்லஸ் சாதனம் மூலம் விடுத்த சமிக்ஞையைத் தொடர்ந்து, இந்த மீட்பு முயற்சி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதாக அமெரிக்க தரப்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

# 'சுப்பர்' உளவு விமானங்கள்

வளைகுடா போரில் புதிய நவீன சுப்பர் இரகசிய உளவு விமானங்களை பன்னாட்டுப் படைகள் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன என்று பென்டகன் அதிகாரிகள் நேற்று அறிவித்தனர்.

மோசமான காலநிலையிலும் கூட தரையில் மெதுவாகச் செல்லும் எதிரி டாங்கிகளின் நகர்வைக் கண்டுபிடித்து அது பற்றிய தகவல்களை போர் விமானங்களுக்கு இந்த இரகசிய உளவு விமானங்கள் தெரிவிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# துருக்கிக்கு கோரிக்கை

பன்னாட்டுப் படைகளுடன் சேர்ந்து ஈராக்குக்கு எதிராகப் போரிட வேண்டாம் என்று துருக்கியை ஈரான், லிபியா, ஜோர்தான் ஆகிய நாடுகள் வற்புறுத்திக் கேட்டுள்ளன.

இது தொடர்பாக துருக்கி அரசுடன் பேச ஈரான் ஜனாதிபதி ரஸ்வன்ஜானி சிறப்புத் தூதர் ஒருவரை அங்காராவுக்கு அனுப்பி வைத்துள்ளார். வளைகுடா போரில் பன்னாட்டுப் படைகள் தமது தளங்களைப் பாவிக்க துருக்கி அரசு அனுமதியளித்துள்ளது தெரிந்ததே!

# ஈராக் படையில் சேர மலே. இளைஞர் விருப்பம்

ஈராக் படைகளுடன் சேர்ந்து போரிட விரும்பும் மலேசிய இளைஞர்களின் விவரங்களை அங்குள்ள இஸ்லாம் அரசியல் கட்சி சேகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய இளைஞர்கள் செல்வதை அரசினால் தடை செய்ய முடியாது என்று கோலாலம்பூரில் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்:

# 18 விமானங்கள் வீழ்ந்தன

ஆறாவது நாளாக நேற்று நடந்த போரில் எதிரிப் படைகளைச் சேர்ந்த 18 போர் விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை ஈராக் படைகள் சுட்டு வீழ்த்தின என்று பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

★ பன்னாட்டுப் படைகளைச் சேர்ந்த பிரெஞ்சு போர் விமானங்களின் ஓர் அணி நேற்று ஈராக்கிய கடற்படைத் தளம் ஒன்றைத் தாக்கியது. இதில் ஈடுபட்ட பிரெஞ்சு ஜாகுவர் போர் விமானங்கள் அனைத்தும் பத்திரமாகத் திரும்பின என்று பாரிஸில் பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

# பாக். பிரதமர் முயற்சி

★ வளைகுடாப் போரில் சமரசத் தீர்வு காணும் முயற்சியை மேற்கொள்ளுமுகமாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் நேற்று ஈரான் தலைநகர் போய்ச் சேர்ந்தார்.

★ வளைகுடா போரின் முதற் கட்டத்தில் ஈராக் வெற்றியீட்டி இருப்பதாக பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

★ துருக்கியில் உள்ள நேட்டோ அமைப்பின் அலுவலகக் கட்டடம் ஒன்றில் மூன்று குண்டுகள் நேற்று வெடித்தன. துருக்கி கம்யூனிஸ்ட் கட்சி இதற்கு உரிமை கோரியுள்ளது.

# மரண அறிவித்தல்

## திரு. நடராசா ரஞ்சித் கணேசகுமார்

(கனால் பரிசோதகர் - யாழ்ப்பாணம்)

இருபாலையைச் சேர்ந்த திரு. நடராசா ரஞ்சித் கணேசகுமார் 21-01-91 திங்கட்கிழமை இரவு சிவபதமடைந்துவிட்டார். இவர் திரு. த. நடராசா [இளைப்பாறிய அதிபர் யா / யூனியன் கல்லூரி, கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்], திருமதி சரஸ்வதி நடராசாவினதும் சிரேஷ்ட புதல்வனும், மாலாவின் அன்புக் கணவரும் நிரஞ்சன், நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-01-91 செவ்வாய்க்கிழமை 4 மணியளவில் ''தங்கஸ்தான்'' இருபாலையில் நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. நடராசா

''தங்கஸ்தான்''
இருபாலை. [15585]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மாளாதோ மும் முனகல்?

ஒரு மனிதனின் மூலமுதல் சொத்து உயிர். அது பிரிந்து விட்டால் அவன் அதுவாகி விடுகிறான். அந்த உயிரை உடலோடு ஒட்ட வைத்திருக்கும் மிக அத்தியாவசியமான இரண்டு உணவும், மருந்தும்.

தமிழர்கள் தங்கள் உயிரை உடலோடு ஒட்ட வைத்திருப்பதற்குக் கடந்த ஏழு மாதங்களாக படும் கஷ்டங்கள் எண்ணிறந்தவை. உணவும், மருந்தும் போதிய அளவில் கிடைக்காமல் அவர்கள் படும் அவலங்கள் குறித்து இப்பத்தியில் பல தடவைகள் எடுத்தியம்பி இருக்கிறோம். மாதத்துக்கு மாதம், வாரத்துக்கு வாரம், நாளுக்கு நாள் நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து வருகிறதே அன்றி, சற்றேனும் சீர் திருந்துவதாக இல்லை.

உணவுப் பொருள்களுக்குப் பெரும் பற்றாக்குறை; தட்டுப்பாடு.

இச்சூழ்நிலையில் தமிழர்கள் தமது இரண்டு பிரதானமான அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமல் உயிரைத் தப்ப வைக்கத் தவிக்கின்றனர். ஆனால் அவர்களின் தவிப்பும், இன்னலும் கொழும்பில உணரப்படுவதாகத் தெரியவில்லை. அரசாங்கம், பத்திரிகைகள் ஆகிய இரண்டும் சேர்ந்து தமிழர்கள் உணவு, மருந்துப் பட்டினி போடப்படவில்லை என்று காட்டிக் கொள்கின்றன. அதனால் அதிகாரிகள் மட்டத்திலோ, பொதுமக்கள் மட்டத்திலோ தமிழர்கள் உயிரைப் பிடித்துக்கொள்ள அனுபவிக்கும் அவலங்கள் தெரியவில்லை.

கப்பலில் போதிய உணவு வகைகள் போகின்றன. செஞ்சிலுவை மூலம் தேவையான மருந்துகள் அனுப்பப்படுகின்றன என்ற அபிப்பிராயமே எல்லா மட்டங்களிலும் விதைக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் தட்டுப்பாடு, பற்றாக்குறை, விலை உயர்வு என்ற மும்முனையும் தொடரப்போகின்றன. ஆட்சேபதைக்கு அவை மாறப் போவதில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே தமிழ்ப் பகுதிகளின் உணவு, மருந்துத் தேவைகளை ஈடுசெய்வதற்கு கொழும்பையே முழுக்க முழுக்க எதிர்பார்த்துக் கொண்டிருப்பது மந்த புத்தித்தனமானது. பல மாற்று மார்க்கங்கள் கண்டறியப்பட வேண்டியது காலத்தின் தேவையாகிவிட்டது.

மாற்று மார்க்கங்களில் முதன்மையானதாக தமிழ்ப் பகுதிகளின் பிரதேச உணவு வகைகளையும், மருந்து வகைகளையும் உற்பத்தி செய்வதற்கு இப்போதே கால்கோள் இடப்பட வேண்டும். அவற்றை பயன்படுத்தி திருப்தி காண்பதற்கு மனதைப் பண்படுத்த வேண்டும்.

இல்லையேல் கடல் வற்றும் வற்றும் எனக் காத்திருந்து உடல் வற்றிச் செத்த கொக்கின் கதையாகிவிடும் தமிழர் வாழ்வு.

தமிழர்களின் உண்மை நிலையை வெளிநாடுகளுக்கு எப்படியாவது எடுத்துச் சொல்லி, சரியான பிரசார வழிகளைக் கையாண்டு அவற்றிடமிருந்து மனிதாபிமான ரீதியில் உதவி பெற முயற்சிப்பதும் மாற்று மார்க்கங்களில் ஒன்றாக அமையலாம்.

# வீதிகளை மீளத் தாரிடும் வேலை மீண்டும் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். மாவட்டத்தில் அண்மையில் திருத்தப்பட்ட வீதிகளில் மீளத் தார் இடும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

யாழ். மாநகரசபை உயரதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருட ஆரம்பத்தில் பிரதான வீதிகள் சில தாரிடப்பட்டிருந்தன.

ஆனால் பின்னர் ஜூன் முதல் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து சில வீதிகள் தாரிடப்படுவது இடையில் நிறுத்தப்பட்டது. சில தாரிடப்பட்டன.

வழமையான வீதிகள் போடப்பட்ட பின்னர் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக மீளத் தார் இடப்பட வேண்டும்.

ஆனால் தொடர்ந்து இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இது சாத்தியப்படாமல் போயிற்று.

தற்போது முதற்கட்டமாக கஸ்தூரியார் வீதி, பிறவுண் வீதி, பணிக்கவுண்டு போபுர வீதி [வெலிங்டன் சந்தி-நாவலர் வீதி இணை வீதி] பங்சால் வீதி, 2 ஆம், 3 ஆம், 4 ஆம் குறுக்குத் தெருக்கள் மீளத் தாரிடப்பட உள்ளன.

இந்த வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியும் என்றாலும் தேவையான மண்ணைப் பெறுவதில் கஷ்ட நிலை ஏற்படுவதாலும் எப்படியும் பெப்ரவரி மாதப் பகுதியில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார். [இ-6]

### இலவச வைத்தியம்

யாழ்ப்பாணம், ஜன 23

விஷகடி வைத்தியர் சிவபாலன் இப்போது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு எதிரே உள்ள தேவிப்புளியடியில் தமது இலவச சேவையைச் செய்து வருகிறார்.

இவர் முன்னர் தெல்லிப்பளையில் தமது வைத்திய சேவையைப் புரிந்து வந்தவர். இராணுவ நடவடிக்கையினால் இப்போது சண்டிலிப்பாயில் தங்கியுள்ளார். (வ)

## திட்டமிட்ட திகதிக்கு ஒரு நாள் முன்னதாக சுக்லா வருகிறார்

கொழும்பு, ஜன. 23

இந்திய வெளியுறவு அமைச்சர் வித்யா சரண்சுக்லா திட்டமிட்ட திகதிக்கு ஒரு நாள் முன்னதாக ஜனவரி 28 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்கிறார்.

கொழும்பு அரச தலைவர்களுடன் மூன்று முழு நாட்கள் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே இம்மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அமைச்சருடன் இந்திய வெளியுறவு அமைச்சின் இலங்கை - மாலைதீவு பிரிவுத் தலைவரான திரு. ரஞ்சன் மத்தாய், வெளிநாட்டுப் பிரசாரப் பிரிவு இயக்குநர் அப்தாப் ஹுசேன் ஆகியோரும் கொழும்பு விஜயம் செய்கின்றனர். 20 க்கு அதிகமான இந்திய பத்திரிகையாளரும் அமைச்சருடன் வருகின்றனர்.

### படையினரின் உத்தரவில்

## மகனின் பாஸ்போர்ட்டை கிழித்தெறிந்த தந்தை

மகனின் பாஸ்போர்ட்டை கொழும்புக்குக் கொண்டு சென்றவர் படையினரின் உத்தரவுப்படி அதைத் தனது கையாலேயே கிழித்தெறிந்தார்.

கடந்த வாரம் வவுனியாவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது-

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் தமது மகனின் பாஸ்போர்ட்டைப் புதுப்பிப்பதற்காக கொழும்பு புறப்பட்டார்.

வவுனியாவில் படையினர் சோதனை நடத்திய போது அந்த பாஸ்போர்ட் பற்றி கேள்வி மேல் கேள்வி கேட்டனர்.

பின்னர் இது போராளிகளின் பாஸ்போர்ட் எனக்கூறி அவரின்கையாலேயே அதனை கிழித்தெறிய வைத்தனராம். [இ-100]

### செய்திக் கொத்து

**போக்குவரத்து சீரடைந்தது**

காலநிலை சீர்கேடு காரணமாக பாதிக்கப்பட்டிருந்த சேரதிவு - சங்குப்பிட்டிப் போக்குவரத்துச் சேவை சனிக்கிழமை முதல மீண்டும் வழமைக்கு வந்துள்ளது [இ-6]

**யூனியன் கல்லூரிக்கு ஏற்பட்ட இழப்பு**

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு 75 லட்சம் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக கல்லூரி பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் குழு ஒன்று கல்லூரிக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை குறித்து நேரில பார்வையிட்டு விவரங்களைச் சேகரித்துள்ளது. (இ 68)

**கலை அரங்கு**

நவாலி இளம் கலைஞர் மன்றத்தினர் நடிகரும், திரைப்பட இயக்குனருமாகிய மறைந்த கலைஞர் திரு. எஸ் அருளானந்தன் ஞாபகார்த்தமாக கலையரங்கு ஒன்றை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளனர். [இ-100]

**பிரதேச சபை இடம் மாற்றம்**

தற்போது ஊர்காவற்றுறையில் இராணுவம் நிலைகொண்டுள்ளதால் இயங்க முடியாத நிலையில் இருந்த ஊர்காவற்றுறை பிரதேச சபை புளியங்கூடலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. [இ-125]

### சவூதி - ஈராக் உடன்படிக்கை ரத்து

சவூதி அரேபியாவுடன் முன்னர் செய்து கொண்ட சகல உடன்படிக்கைகளையும் ஈராக் நேற்று ரத்துச் செய்துவிட்டது

இந்த உடன்படிக்கைகளில் ஒன்று, இருநாடுகளும் பரஸ்பரம் தாக்கிக் கொள்வதில்லை என்பதும் ஆகும்.

இந்த உடன்படிக்கைகளுக்கு முரணாக மேலைநாடுகளின் வலைக்குள் சவூதி அரேபியா சிக்கிச் செயல்படுவதும்—பன்னாட்டுப்படைகளுடன் சேர்ந்து ஈராக்மீது யுத்தம் நடத்துவதுமே உடன்படிக்கைகளை ரத்துச் செய்வதற்குரிய காரணமாகும் என ஈராக் அரசு மேலும் அறிவித்தது.

## வெளிநாட்டவர் பெயர்களை பதியுமாறு ஈராக் உத்தரவு

ஈராக்கில் வாழும் சகல வெளிநாட்டாரும் அடுத்த 72 மணித்தியாலங்களுக்கு இடையில் தங்கள் பெயர் மற்றும் விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று பக்தாத் அரசு அறிவித்து உள்ளது.

## பலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வு காணும் அவசியம் குறித்து புஷ்

குவைத்தை ஈராக்கின் பிடியில் இருந்து விடுவித்ததும் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சகலரும் தீவிர முயற்சி எடுக்கவேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்

இத்தாலியப் பிரதமருடன் தொலைபேசியில் திரு. புஷ் கடந்த திங்கட்கிழமை பேசினார்.

அப்போதே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உலக நாடுகள் முன்வரவேண்டும் என்றும் திரு. புஷ் சொன்னார்.

## இரசாயன ஆயுத தாக்குதலை ஈராக் எப்போது ஆரம்பிக்கும்?

பன்னாட்டுத் தரைப்படைகள் தாக்குதலை ஆரம்பித்த பின்னர் தான் இரசாயன ஆயுதங்களை ஈராக் பாவிக்கும். இப்படி பெல்ஜியம் பேராசிரியர் ஒபின் ஹெய்ன்ட்ரிக்ஸ் தெரிவித்திருக்கிறார்.

ஈரான்—ஈராக் யுத்தத்தில் ஈராக்கின் இரசாயன ஆயுதத் தாக்குதலுக்குள்ளான ஈரானிய படையினருக்கு இந்தப் பேராசிரியர் தான் சிகிச்சை அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் பேராசிரியர் ஹெய்ன்ட்ரிக்ஸ் சொன்னதாவது;

மத்திய கிழக்கு முழுவதையும் நச்சுப் புகைக்குள் அமிழ்த்தி விடக்கூடிய இரசாயன ஆயுதபலம் ஈராக்கிடம் உண்டு. நூற்றுக்கணக்கான இரசாயன ஆயுதங்கள், ஷெல்கள் ஈராக்கிடம் உள்ளன.

தற்போதைய போரில் தமக்கு வெற்றி என்று கூறுபவர்கள் ஈராக்கிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை இன்னும் காணவில்லை.

பன்னாட்டுப் படைகள் பாலைவனத்தில் தரைப் போரை ஆரம்பித்த பின்னர், இந்த ஆயுதங்களைக் காணப் போகின்றன.

பீரங்கிகள் மூலம் இரசாயன ஷெல்களையும் ஆர்ட்டிலறி இரசாயன ஷெல்களையும் சதாம் ஹுசேன் பாவிக்கத் தொடங்க உள்ளார். அதற்காக அவர் காத்திருக்கிறார். பன்னாட்டுத் தரைப் படைகளை பெரிய ஆபத்து காத்திருக்கிறது.

நச்சு வாயுத் தடுப்பு முகமூடி ஓரளவு தான் பாதுகாப்பளிக்கும். நீண்ட நேரம் அதை அணிந்து கொண்டு போராட முடியாது

இப்படி பேராசிரியர் ஹெய்ன்ட்ரிக்ஸ் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதைத்தவிர வேறு வழி இல்லை

## இந்தியத் தூதுவர் ஜா பேட்டி

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத்ஜா கொழும்பு ஆங்கில வார இதழ் சண்டே டைம்ஸுக்கு அளித்த பேட்டியின் சில பகுதிகள். கேள்வி-பதில் வடிவத்தில் தரப்பட்டுள்ளன.

**கேள்வி:** விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி இந்தியா என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது?

**ஜா:** தமிழ்நாட்டில் இன்னும் உள்ள விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தமிழ்நாடு அரசுமீது நாம் நிர்ப்பந்தம் மேற்கொண்டு வருகிறோம். தமிழகத்தில் ஆயுத முகாம்கள் எதுவும் இல்லை. உங்களுக்கும் எங்களுக்கும் சில்லறைத் தொந்தரவுகளைத் தரும் முகாம்கள் தான் உள்ளன.

**கேள்வி:** இப்போது ஆயுத முகாம்கள் எதுவும் இல்லை என்று சற்று முன்னர் கூறினீர்கள்?

**ஜா:** இப்போது ஆயுத முகாம்கள் எதுவும் இல்லை.

**கேள்வி:** முன்னர் ஆயுத முகாம்கள் இருந்தன என்பது தான் உங்கள் பதிலின் அர்த்தமா?

**ஜா:** உங்களுக்குத் தெரியாமல் உங்கள் கண்ணெதிரேயும் ஆயுத முகாம்கள் இருக்க முடியும். உங்களுக்குத் தெரியாமல் உங்களின் அயல் வீட்டில் கூட ஆயுதங்கள் இருக்க முடியும். அதன் கருத்து நீங்களும் உடந்தை என்பது அல்ல.

1990, 1991 ஆம் ஆண்டுகளில் ஆயுத முகாம்கள் எம் நாட்டில் இல்லை என்பது தான் இச்சந்தர்ப்பத்தில் முக்கியமானதாகும். முன்னர் அப்படி இருந்திருக்கக்கூடும். அது குறித்து கருத்து வேறுபாடு உண்டு.

**கேள்வி:** தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் போராளிகள் கைது செய்யப்படவில்லை என்றும் தங்கள் இயக்கப் போராளிகள் தான் கைதுசெய்யப்படுகிறார்கள் என்றும் ரெலோ போன்ற அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளனவே.

**ஜா:** பாரபட்சமின்றியே தமிழக அரசு நடப்பதாக நான் எண்ணுகின்றேன். போராளிகள் குறித்து தமிழ் நாட்டில பொதுசன அபிப்பிராயம் விரக்தி நிலையில் தான் காணப்படுகிறது. ஒரு நாட்டில் பிரச்சினை [illegible] [illegible] க் காப்பாற்றக் கூடியதாக இருக்கும். அதற்குப் பின்னர் அந்நாட்டுக்கு அது அலுவையாக (Boring) இருக்கும். தினமும் சுவாரசியமானதாக அது இருக்காது. உயிருள்ள பிரச்சினையாக ஒரு மாதம், ஒரு வருடம், இரண்டு வருடங்கள் அது இருக்கலாம். இப்போது அது அலுவையாகி விட்டது.

**கேள்வி:** வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணப்படவேண்டும் என்பதுதான் இன்னும் இந்தியாவின் நிலைப்பாடா?

**ஜா:** ஆம். அக்கறையுள்ள சகல தரப்பினரும், சகல தமிழ்க் கட்சிகளும் பேச்சுகள் மூலம் தீர்வு காணுவதைத் தவிர வேறு வழியில்லை. யுத்தத்தை நிறுத்த விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கியுள்ள சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்பதே என் எண்ணம். உயிர்களுடனும் உடைமைகளுடனும் நாம் [illegible] கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**கேள்வி:** விடுதலைப் புலிகளின் காலவரையறையற்ற யுத்த நிறுத்த அழைப்பை— திரு. பிரபாகரன் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டும் என்ற — நிபந்தனை இன்றி அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது உங்கள் நிலைப்பாடா?

**ஜா:** இல்லை. திரு. பிரபாகரன் பேச்சுகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பது சரியான முன் நிபந்தனை ஆகும். பேச்சுக்களில் ஜனாதிபதியோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே பங்குபற்றப்போகிறார். ஆகவே அடுத்த தரப்பில் இருந்து திரு பிரபாகரன் கலந்து கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கம் முழுமையாக திரு பிரபாகரனின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. ஆகவே அவர் சொல்வதுதான் நடக்கும் திரு. பிரபாகரனுக்காக ஏனையோர் வந்து பேசுவது பிரயோசனம் இல்லை.

நிபந்தனைகள் எல்லாம் சரியாக இருக்கலாம். ஆனால் நிபந்தனைகளுடன் மட்டும் நின்று விட்டால் அது சுய தோல்வியைக்கொண்டுவரும் தான் சொல்ல வருவது. நிபந்தனைகளைப் போடும் அதே நேரத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றையும் கொண்டு வர முடியும்.

இலங்கை அரசுக்கு இது தொடர்பாக நான் ஆலோசனை கூறவில்லை; எனது பொது அபிப்பிராயம் ஒன்றையே இங்கு கூறினேன்

முன்னர் போல் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று இலங்கை அரசு இம்முறை வலியுறுத்தவில்லை.

ஒவ்வொருவரும் அவரவர் அனுபவத்தின் படியே வழி நடத்தப்படுகின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## PERSONAL CLASSES

ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரையான பிரத்தியேக ஆங்கில வகுப்புக்களும், 2ஆம், 3ஆம், 4ஆம் தர கர்நாடக சங்கீத - சாஸ்திர (Theory) வகுப்புக்களுக்கும் 11/1 றக்கா வீதி, நல்லூர் எனும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

(15564)

## கல்வி

கல்யாணி ஆங்கில கல்வி நிலையம் 204, மாவிட்டபுரம் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். பின்வரும் ஆங்கில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு வகுப்புகள் தனிப்பட்டவர்களுக்கான பயிற்சி (Individual-tuition) உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் (House Visits). பயிற்சிகள் அனைத்தும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும்.

(15563)

## ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகிறது. Fudo, 89/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [பஸ் நிலையத்தின் முன்பாக] [சி/5664]

## மணமகள் தேவை

யாழ்: இந்து தாரமிழந்தவர் (10 வயதுப் பிள்ளையுண்டு) அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் வகிக்கும் 46 வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை. ஆசிரியைகளும், தாரமிழந்தோரும் விவாகரத்தானோரும் கூட விண்ணப்பிக்கலாம். மகிஷா ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்.

[15577]

## காணவில்லை

சி. வீரகத்தி 411350339 இலக்க அடையாள அட்டையும், உடுப்புப்பாசலும், காசு 5000/- வும் 18 - 1 - 91 அன்று கிளாலி வீதிக்கும் எழுதுமட்டுவாழ் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். கண்டு எடுத்தவர்கள் அடையாள அட்டையை ஆவது அனுப்பி வைக்கவும். சி. வீரகத்தி சிவன் கோவில் வீதி, எழுதுமட்டுவாழ். [சி/5676]

## தடுப்பூசி

வல்வெட்டித்துறை, ஜன; 23

பருத்தித்துறை கால நடை வைத்தியர் அலுவலகத்தினரால் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (இ-160)

---

# வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
## மருதங்கேணி
# பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர் 104/10

சம்பள அளவுத்திட்டம்: 1005 — 1705 / 40 x 5 — 50 x 10

[அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்]

வயதெல்லை: 23 — 45 வருடங்கள்.

கல்வி மற்றும் தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9 ஆவது சம்பளத் திட்டத்தின் கீழ் பதிவாளர்/கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கீழ் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராட்சியத்தின் கணக்கு பதிவாளர் நிறுவனத்தின் இறுதி நிலைப்பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபன மொன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டத்தில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராட்சியத்தின் கணக்கு பதிவாளர் நிறுவனத்தின் இடை நிலைப்பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றின் கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டப்பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. க.பொ. தராதரப்பத்திரம் (உயர்தரம்) க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபன மொன்றில் கணக்கியல் / எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், மருதங்கேணி, தாளையடி என்ற விலாசத்திற்கு 15-02-1991க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

வடமாராட்சி கிழக்கு.
ப. நோ. கூ. ச.,
மருதங்கேணி.

[இ-5674]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-1-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்
## வேலாயுதம் முத்தம்மா

மலர்வு: 08 - 03 - 1924 உதிர்வு: 24 - 12 - 1990

எமது அத்தையின் மரணச்சடங்குகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு 23 - 01 - 91 புதன்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செ. கந்தசாமி தம்பதிகள்
க. சந்திரசேகரம், பத்மநாயகி, க. ஸ்ரீதேவி.

"ஸ்ரீதேவி இல்லம்"
வேலணை கிழக்கு,
வேலணை.

[15576]

---

# 2ஆம் ஆண்டு
## கண்ணீரலைகளின் நினைவுகள்



தோற்றம்: 29 - 01 - 1975

மறைவு: 23 - 01 - 1989

புண்ணியலிங்கம் சொரூபினி (சோபா)
(கொக்குவில் இந்து மாணவி)

இறைவா நீ ஆளும் போது உன்
அடியின் கீழ் சொரூபினி இருக்க இறைஞ்சுகிறோம்

புண்ணியலிங்கம் குடும்பத்தினர்.

'தர்மம்'
தாவடிச்சந்தி, கொக்குவில்.

[15579]

---

# 2வது ஆண்டு நினைவஞ்சலி



## ஆ. க. அண்ணாமலை B. Sc.
(பரிஸ்டர், சட்டத்தரணி)

மலர்வு: 14 - 4 - 1934 உதிர்வு: 12 - 1 - 1989

திதி: 23 - 1 - 1991

மரணத்தால் உங்கள் பூதவுடல் மட்டும்தான் அழிந்து விட்டது, எம்மனதில் நீங்காது நிறைந்து நிற்கின்றீர்கள்.

மனைவி, மகள்

36, புதிகன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

[15578]

---

# அரசாங்க அறிவித்தல்

## பாடசாலை வைத்திய அதிகாரி காரியாலயம்

இலக்கம் 94, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குழி என்ற முகவரியில் இதுவரை காலமும் இயங்கி வந்த பாடசாலை வைத்திய அதிகாரியின் காரியாலயம் (S. M. O's Office) குருநகரிலுள்ள அரசாங்க வைத்தியசாலையாகிய மத்திய மருந்தகம் மகப்பேற்றுமனை கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

ந. கனகசபை,
பிராந்திய சுகாதார சேவைகள்,
பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

(இ/5673)

---

# நினைவஞ்சலி
## 21-ம் ஆண்டு 1-ம் ஆண்டு



**திரு. கிருஷ்ணசாமி சோமநாதன்**
மண்ணில்: 24 - 01 - 1914
விண்ணில்: 25 - 12 - 1969

**திருமதி இராசமணி சோமநாதன்**
மண்ணில்: 25 - 01 - 1920
விண்ணில்: 03 - 02 - 1990

அன்பின் உருவாய் பண்பின் பிறப்பிடமாய், பாசத்துடன் எம்மையெல்லாம் வளர்த்து, வழி நடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வங்களே! உங்கள் பொன்னான நினைவுகள் எம்மைவிட்டு என்றுமே அகலாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

தகவல்: மகன் - ரவீந்திரன்

மக்கள், மருமக்கள், சகோதரி, பேரப்பிள்ளைகள்.

சிவன் கோவில் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை.

[15565]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்



## சி. நடராசபிள்ளை
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

24 - 01 - 91 இல் வீட்டில் அந்தியேட்டிக் கிரியைகள் செய்து வல்லை, ஊறணி சமுத்திரத்தில் கரைக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

இங்ஙனம்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"புவன ஜோதி"
இந்திரன் வீதி, வல்வெட்டித்துறை.

[15562]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org